RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s175

OPEN ACCESS

# ‘நிழலாய் இருந்தவர்கள்’ சிறுகதையில் காணலாகும் இனக்குழுப் பண்பாட்டுப் பதிவுகள்

ர. ரத்தினகுமாரி [அ, *]

[அ] தமிழ் உயராய்வு நடுவம், டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை- 625002, தமிழ்நாடு, இந்தியா

# The Ethnocultural Records found in the short story 'Nizhalai Irunthavarkal (Those Who Were the Shadow)'

**R. Rathinakumari** [a, *]

[a] Centre for Tamil Research, Lady Doak College, Madurai-625002, Tamil Nadu, India

* Corresponding Author:
rathi077352@gmail.com

Received: 29-03-2022
Revised: 20-10-2022
Accepted: 03-11-2022
Published: 17-12-2022

Check for updates

**ABSTRACT**

Language and thought contribute to the success of literature. Accordingly, on the one hand, literary creation, and linguistic ideas, and on the other hand, it depends on the nature of the creator's exposure to them. Every poet wants to present in his work the event that has affected him in the society to which he belongs, that has stuck in his mind, and that constantly questions him. In that way, culture is a part of society. In today's context, the way creators handle culture has changed. It can be seen that the culture is dying. Literature is presented as cultural records of the way people in an individual community have their own unique language, beliefs, rituals, relationships, occupations, economics, habits, food, etc. The differences between the community and the particular ethnic group are identified and the creation of works is centered on the works. S Ramakrishnan's short story story 'Nizhalai Irunthavarkal (Those Who Were the Shadow)' is one of them. Though the work focuses on the Reddys, it also reveals the cultural records of the Thevars, citizens, etc. This article also highlights the cultural records of these three ethnic groups through the short sto

**Keywords:** Culture, Language, Rettiar, Citizen, Language, Customs.

## முன்னுரை

ஒரு தனிப்பட்ட சமூகத்தில் உள்ள மக்கள் அவர்களுக்கென தனித்த மொழி, நம்பிக்கைகள், சடங்குகள், உறவு, தொழில், பொருளாதாரம், பழக்கவழக்கங்கள், உணவு போன்ற முறைகள் வாழ்வியலின் பண்பாட்டுப் பதிவுகளாக இலக்கியங்கள் காட்சிப்படுத்தப்படுகின்றன. சமுதாயத்திற்கும் குறிப்பிட்ட இனக்குழுவிற்கும் உள்ள வேறுபாடுகளைக் கண்டறிந்து அவற்றைப் படைப்புகளில் மையமாக வைத்து படைப்புகள் உருவாக்கம் பெருகின்றன. அவற்றுள் எஸ்.ராமகிருஷ்ணன் ‘நிழலாய் இருந்தவர்கள்’ சிறுகதையும் ஒன்றாக உள்ளது. ரெட்டிமார்கள் என்னும் இனக்குழுவை மையமாகக் கொண்டு படைப்பு அமைந்தாலும் தேவர் வகுப்பினர், குடிமகன் போன்றோரின் பண்பாட்டுப் பதிவுகளையும் வெளிப்படுத்துகிறது. இம்மூன்று இனக்குழுவின் பண்பாட்டுப் பதிவுகள் பற்றியும் சிறுகதையின் வழி எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகிறது.

## நிழலாய் இருந்தவர்கள் - கதைச்சுருக்கம்

இச்சிறுகதையில் மூன்று விதமான இனக்குழுக்களைப் பற்றியச் செய்திகளை ஆசிரியர் தெரிவிக்கின்றார். அவை ரெட்டிமார்கள், தேவர்கள், கீழ்வகுப்பினர் (இவர்கள் எந்த இனக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிடவில்லை)

சென்னப்ப ரெட்டியாரின் என்பவர் ஊரிலேயே செல்வம் மிகுந்தவராகவும், மேல்தட்டு வகுப்பினராகவும் காட்சிபடுத்தப்படுகிறார். இவரின் கீழ் குருவன், முனிப்பகடை, கருப்பையா(குடிமகன்) போன்றோர் கீழ்தட்டு வகுப்பினராகவும், மேலும் சுப்பையா தேவர் போன்றோர் மேல்தட்டு வகுப்பினராகவும் படைக்கப்பட்டுள்ளன. குடிமகன் கருப்பையாவை சென்னப்ப ரெட்டியாரின் இறப்பிற்கு அழைத்து வரத் துவங்குவதிலிருந்து சிறுகதை தொடக்கம் பெறுகிறது. கருப்பையா மற்றும் முனிப்பகடையின் வழி சென்னப்பரெட்டியாரின் வாழ்வு மற்றும் ஊரின் இயல்புகளையும் விவரித்தும், கீழ்தட்டு வகுப்பினரின் ஏழ்மைநிலையை விளக்குவதாகவும் அமைந்துள்ளது. சென்னப்ப ரெட்டியார் குடிமகனின் கீழ்நிலையைச் சுட்டிகாட்டி பேசுவதால் கருப்பையா ஊரை விட்டு வெளியேறி அவரின் இறப்பு நிகழ்விற்காக ஊருக்கு வருகின்றான்.

## இனக்குழுபண்பாடு

'Culture' என்னும் ஆங்கிலச் சொல்லிற்குத் தமிழில் பண்பாடு என்று பொருள் கூறப்படுகின்றது. பண்பாடு என்பதற்கு பல கலைக்களஞ்சியங்கள் பொருள் கூறுகின்றன. அவற்றுள் கலைக்களஞ்சியம் "பெரும்பாலும் சிறந்த வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைகின்ற உள்ளப்பாங்கின் வெளிப்பாட்டையே பண்பாடு என்கிறோம் (Aasiriyar kulu, 1954)." இவ்வாறு பண்பாட்டிற்கும் இனக்குழு என்பது மக்கள் குழு அல்லது கூட்டம் என்பதாகும். அதாவது அந்த குழுவில் உள்ள மக்கள் தங்களுக்கென பொதுவான மொழி, பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் மதநம்பிக்கை உடையவர்களாக இருப்பார்கள். மேலும் அவர் ஒரு பொது மரபு வழியைக் கொண்டிருப்பார்கள்" என்றும் விளக்கம் அளிக்கப்படுகின்றது.

பொதுவாக இலக்கியங்களும், சமூகமும் மனிதனுக்கு பண்பாட்டைக் கற்கக் கொடுத்து இயைந்த வாழ்வாக வாழ்ந்து வருகின்றான். இனக்குழுவையும் பண்பாட்டு பதிவுகளையும் இன்றைய காலச்சூழலில் எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதனை இனக்குழுப் பண்பாட்டு ஆராய்ச்சியின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது.

## மொழி

ஒவ்வொரு மனிதனும் தன்னுடையக் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு மொழி இன்றியமையாத ஒன்றாக அமைகிறது. அவ்வாறு இனக்குழுக்களாகச் செயல்படுகின்ற மக்களும் தங்களுக்கு என்று தனித்த மொழிகளைப் பயன்படுத்திக் கொள்கின்றன. அவ்வாறு 'நிழலாய் இருந்தவர்கள்' சிறுகதையில் காணும் ரெட்டிமார்கள் தெலுங்கு மொழியைப் பேசுபவர்களாக காட்சிப்படுத்தப்படுகின்றன. ஏனெனில் இவர்கள் ஆந்திர மாநிலத்தில் இருந்து இடப்பெயர்வு செய்து தமிழகம் மற்றும் புதுச்சேரிப் பகுதிகளில் குடிபெயர்ந்துள்ளனர். தமிழகத்தில் விழுப்புரம் மற்றும் கடலூர், செங்கல்பட்டில் காணப்படுகின்றன (Aasiriyar kulu, 1954).

"குடிமகன் இருக்கான...வீட்ல இல்லையா"

"வாண்டு லேது மாமா"

"எங்க போயி தொலைஞ்சானாம்"

மேலும் அவர்கள் தங்களின் குழுவிற்குள் பேசிக்கொள்ள மட்டுமே தெலுங்கு மொழியை பயன்படுத்திக் கொள்வது படைப்பாளர் வழி அறியமுடிகின்றது (Ramakrishnan, 2005). மற்றவர்களுக்கு இம்மொழி புரியாது இருப்பதையும் காணலாம்.

"ஆம்பளைகளும் பெண்களுமாக நடந்து வரும் இரவில் ஒருத்தர் முகம் அடுத்தவருக்குத் தெரியாது. தெலுங்கில் பேசியபடியே வருவார்கள். கூத்துக்காரர்கள் பஞ்சாயத்து ஆபிஸ் முன்னாடியிருந்த களத்தில்தான் கூத்து போடுவார்கள். அந்த இடத்தைச் சுற்றிப் புளிய மரங்கள் நிறைந்து போயிருந்தன. இரவில் புளியம்பூ வாடையடிக்கும். பூ தெரியாமல்.பெட்ரோமக்ஸ் லைட் வெளிச்சம் மனித நிழல்களை பெருசு பண்ணும்." இவ்வாறு ரெட்டிமார்கள் இனக்குழுவின் தெலுங்கு மொழிவழக்கை கொண்டிருப்பதையும். மற்றவர்கள் சாதரண வட்டார மொழி பேசுபவர்களாகவும் ஆசிரியர் பதிவு செய்கிறார் (Ramakrishnan, 2005).

## தெய்வம் பற்றிய நம்பிகை

ஆதிகால மனிதன் இயற்கை சீற்றங்களால் ஏற்படும் தாக்கத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள இயற்கையை தெய்வமாக மதித்து, அவைகளுக்கு கடவுள் பெயரைச் சூட்டி வழிபாடு செய்தான். இன்றைய தொழில் நுட்பம் முன்னேறிய காலத்திலும் தனக்கு எற்படும் துன்பங்களை நீக்க மனிதன் தொடர்ந்து கடவுள் நம்பிக்கையைக் கொண்டிருப்பதைக் காணமுடிகின்றது. இதனை 'நிழலாய் இருந்தவர்கள்' சிறுகதையில் வரும் முனிப்பகடையின் வழியும் கருப்பையா வழியும் தெளிவுறுத்துகின்றார்.

முனிப்பகடை சென்னப்ப ரெட்டியாரின் இறப்பு தகவல்களை கூறுவதற்காக செவல்பட்டிக்கு செல்லும் போது வழியில் பதினெட்டாம் கருப்பசாமி கோயிலைக் கடந்து செல்கிறான். அப்போது தனது செருப்பை கையில் எடுத்து வைத்துக் கொண்டு செல்வதைக் காணமுடிகின்றது.

"காட்டுக் கோவிலின் வெளியே கல்குதிரை நின்று கொண்டிருந்தது. பதினெட்டுப்படியான் கையில் அருவளோடு காடு காத்துக் கொண்டிருந்தார். அந்தப் பக்கம் போகும் போது செருப்பை எடுத்துக் கக்கத்தில் கைத்துக்கொண்டான். கருப்பசாமியின் பெரிய முளிகள் தனித்துத் தெரிந்தன. சாமி கும்பிட்டுப் போட்டுப் போன வாழை இலையின் சருகுகள் கிடந்தன. தேங்காய்ச் சிரட்டைகள் கிடந்தன. குதிரை காலை வானத்துக்குத் தூக்கி நின்றது. அதன் குறி விடைத்துப் போயிருந்தது." காக்கும் தெய்வமாக கருப்சாமி உள்ளதை இவ்வரிகள் பிரதிபலிக்கின்றன. இவ்வழக்கம் இன்றும் கிராமப்புறங்களில் நடைமுறையில் இருப்பதைக் காணலாம் (Ramakrishnan, 2005).

குலதெய்வத்தைக் கும்பிட்டால் நன்மை நடக்கும் என்று நம்பிக்கையை கருப்பையா வழி வெளிப்படுத்துகின்றார். "இரண்டு மாதத்திற்குள் எவ்வளவோ நடந்து முடிந்து போய்விட்டது. குலதெய்வம் சாமி கும்பிடுவதற்காக மகளைக் கூப்பிடப் போனபோது சரோஜாவுக்கும் அவள் புருஷனுக்கும் சண்டை வந்து இருவருக்கும் வராமல் போனார்கள். மாந்தோப்புக்குள் அந்தக் கோவில் இருந்தது. பக்கத்தில் பெரிய மலையிருந்தது. அவர்கள் பகலில் போய்ச் சேர்ந்த போது அவர்களின் முன்னால் கொஞ்சம் பேர் இறங்கிக் கூடவே வந்தார்கள். யார் எனத் தெரியவில்லை. முன்பெல்லாம் அந்தக் கோவிலுக்கு வரும் நாளில் பிள்ளைகள் கடந்து ஓடும் மரங்களைப் பார்த்தபடியே வரும். ரயில்வே ஸ்டேஷனில் ரயிலுக்காக வேண்டி நிற்பார்கள்.மாந்தோப்பின் ஊடேயிருந்த கோவிலுக்கு வரும் கூட்டம் அங்கேயே உறங்கும் (Ramakrishnan, 2005)."

குலதெய்வ கோயில்களுக்கு பெரும்பான்மையாகச் சிறுதெய்வங்களே இருப்பதால் அவைகளுக்கு உருவ வழிபாடுகள் கிடையாது. மனகசப்பிற்கு ஆளாகும் மனிதன் பெருந்தெய்வங்களை விட குலதெய்வ வழிபாடு நம்பிக்கையை தருவதாக அமைவதைப் படம்பிடித்துக் காட்டுகிறார் ஆசிரியர்.

## வழிபாட்டு முறைகள்

சிறுதெய்வ வழிபாட்டு முறைகளே இச்சிறுகதையில் அதிகமாகப் பிரதிபலிக்கின்றன. முனிப்பகடை ஊர் காக்கும் காவல் தெய்வமான கருப்பசாமியின் கோயிலைக் காணும் போது, அங்கு வாழை இலையில் உணவுப் படைத்தற்கான இலைகளும், தேங்காய் சிரட்டைகளும் கிடப்பதை காணமுடிகின்றது. இதே போன்று கருப்பையா தனது குலதெய்வ வழிபாட்டு முறையையும் அறிவுறுத்துகிறார்.

“கறி வேகும் வாடை எங்கும் அடிக்கும். மலை ஓரத்தில் சாராயக் கடை இருந்தது. சாராயம் குடித்துவிட்டு வந்து கறிச் சோறு சாப்பிட்டார்கள். கோயில் என்றால் வெறும் பீடம் மட்டுமே இருக்கும். கறிவாடைக்கு எங்கிருந்தோ நாய்கள் வந்து படுத்துக் கிடந்தன. சாப்பிட எலும்புத் துண்டுகளை இழுத்துக் கொண்டு ஓடின”. சாராயம் குடித்துவிட்டு அசைவ உணவு உண்ணும் பழக்கமானது பெரும்பான்மையாகச் சிறுதெய்வ வழிபாட்டிற்கு உரியதாகக் கருதப்படுகிறது. இதனை ஆசிரியர் தெளிவுறுத்துகிறார் (Ramakrishnan, 2005).

## பழக்கவழக்கம்

செவல்பட்டியில் சென்னப்ப ரெட்டியாரின் இறப்பின் போது அவரைக் குளிக்க வைத்து நாற்காலியில் வாயைக் கட்டி அமர வைத்திருப்பதைக் காணமுடிகின்றது. இது கிராமப்புற பழக்கவழக்கங்களைப் போல உடலை நாற்காலியில் வைக்கும் பழக்கத்தைக் காணமுடிகின்றது.

“இரண்டு தடவை பீடி வாங்குவதற்காக அவனைக் கூப்பிட்டார்கள். அவனும் போய் பீடி வாங்கி வந்தான். திரும்பி வரும்போது வாயைக் கட்டி மர நாற்காலியில் உட்கார வைத்திருந்தார்கள். சவத்தை.முகம் உப்பிப் போயிருந்தது. அகன்ற முகம் இன்னும் விரிந்து போயிருந்தது. கட்டையான புருவம் அவருக்கு. அவர் முகத்தைப் பார்க்கும்போது அவனுக்கு அவர் செத்தது போலவே தெரியவில்லை. ஒரு கட்டுப் பத்தி கொளுத்தி வைத்திருந்தார்கள். புகை எழும்பி அறையெங்கும் அலைந்தது.” மேலும் இறந்தவரின் சடலங்களை புதைக்காமல் எரியூட்டும் வழக்கத்தினையும் காணமுடிகின்றது (Ramakrishnan, 2005).

சென்னப்ப ரெட்டியாரை எரித்துவிட்டுக் திரும்பிய கூட்டம் பேசியபடியே வந்தது. கருப்பையா சுடுகாட்டில் எரிவதைத் தூரத்திலே பார்த்தான். புகை எழுந்தது உயரமாக…சென்னப்ப ரெட்டியார் வீட்டுக்குப் போன போது வெறும் நாற்காலியை வெளியே போட்டிருந்தார்கள்.

## தொழில்கள்

‘நிழலாய் இருந்தவர்கள்’ சிறுகதையில் வரும் பெரும்பான்மையான மக்களின் தொழில்கள் கால்நடை வளர்ப்பும், விவசாயமும் காணப்படுகின்றது. மழை இல்லாத நேரங்களில் தண்ணீருக்காக பல இடங்களுக்கு மக்கள் செல்வதையும் காணமுடிகின்றது. இதில் சவரம் செய்யும் குடிமகன் கருப்பையா பற்றிய செய்திகளை எழுத்தாளர் விளக்குகின்றார்.

பெரிய குருவா ரெட்டியார் என்பவர்தான் குடிமகனை ஊருக்கு அழைத்து வந்ததாகவும், அவனுக்கு வீடு போடவும் நிலம் கொடுக்கப்படுகிறது. இதனை, “ஆதியில் ஊரில் நாற்பது வீடுகள்தான் இருந்தன. பெரிய குருவா ரெட்டியார்தான் குடிமகனை ஊருக்கு கூட்டி வந்தார். அவனுக்கு வீடு போட இடம் கொடுத்தார். கருப்பையா அந்த ஊருக்கு வந்த பின்பே பிள்ளைகள் ஆனது. மூணும் பொம்பளைப் பிள்ளைகள் கெசவால்களாகப் பிறந்தன” (Ramakrishnan, 2005).

கருப்பையா தனது தொழிலுக்கு வைத்திருந்த பொருள்கள் பற்றி “அவன் சின்னப் பெட்டி வைத்திருந்தான். அதில் இரண்டு கத்திரிப்பான்கள், இரும்புச் சீப்பு, வட்டச் சீப்பு, அலுமினியக் கிண்ணம், கட்டிங் மிஷன் எல்லாமிருந்தன. இடுப்பில் கறுப்பு பெல்ட் கட்டியிருப்பான். பெல்ட்டில் சவரக் கத்தியைச் சொருகி வைத்துக் கொள்வான். பிள்ளைகள் அவனைக் கண்டதும் ஒடுவார்கள் சின்னப் பையன்களிலிருந்து எல்லோரும் அவனைப் பேர் சொல்லித் தான் கூப்பிடுவார்கள். அவன் எல்லோரையும் அப்பச்சி என்பான்” என்று அறிய முடிகின்றது (Ramakrishnan, 2005).

மேலும் கருப்பையாவுக்கு சிறுகுழந்தைகளுக்கு முடி வெட்டுவதே பிடித்தமானச் செயலாக இருப்பதையும் காணலாம். “சின்னப்பிள்ளைக்கு முடிவெட்டி விடுகிறதென்பதே அவனுக்கு ரெம்பவும் பிடிக்கும். கால்களுக்குள் இடுக்கிவைத்துக் கொண்டு வெட்டுவான். அவனிடம் முடிவெட்டிக்கொண்ட பையன்கள் பெரிய ஆட்களாக மாறியும். அவனை முறைத்தபடி போவார்கள். அவன் படப்புக்குப் பக்கம் போய் உட்கார்ந்தும் பிள்ளைகள் ஓட்டம் ஓடத் தொடங்குவார்கள். பிடித்துக் தரதரவென இழுத்து

வருவார்கள். சின்னப்பிள்ளைகளை புழுதி கிளம்ப காலை இழுத்தப்படி வருவார்கள் பாதி தூரம் வருவதற்குள் கூப்பிடுவார்கள்.

“கருப்பையா வந்து பிடிச்சுக்கோ”

அவன் எழுந்ததுமே பிள்ளைகள் திரும்பவும் அழுவார்கள். கண்ணீரில் தலைமயிர்கள் ஒட்டிக்கொள்ள வெட்டிவிடுவான். விம்மி விம்மி அழுவார்கள். அவன் அலுமினியக் கிண்ணத்தில் இருந்த தண்ணீரில் தலைமயிர் மிதக்கும்” (Ramakrishnan, 2005).

கருப்பையா முடிவெட்டுவது மட்டுல்லாது ஆண்களுக்கான தாடி எடுப்பது, முடி மழிப்பது போன்ற செயல்களையும் செய்வதை “வேலுத்தேவர் வகையறாக்கள் இருந்தார்கள். எல்லோருக்கும் பெரிய மீசை, கிருதா பட்டையாக இருக்கும் ட கிருதாக்கள் வைக்கச் சொல்லுவார்கள். அதிலும் தலைமயிர் பின்னாடி கிடக்கும்.” அறியலாம் (Ramakrishnan, 2005).

அவ்வூர் மக்களை பொருத்தமட்டில் கருப்பையா மட்டுமே நல்ல குடிமகனாக கருதப்படுகிறான். உடல்நிலை சரியில்லாத போது கருப்பையா தனது மருமகனை அனுப்பி வைக்க, அவன் சரியாக செய்யத் தெரியாததால் மீண்டும் கருப்பையாவே செல்ல வேண்டியச் சூழல் உருவாவதை வலியுறுத்துகின்றார்.

“எந்த ஊரு குடிமகன் நீ

புறங்கையை சிரைக்காம...தலைக்கு வரே...எவன் தொழில் சொல்லிக் கொடுத்தான்.

ராமசாமி ரெட்டியார் தலையைக் கவிழ்ந்தபடியே அவனைப் பார்த்தார்.

சிரைக்கத் தெரியுமா இல்லையா கருப்பையா எங்க போனான்.

போயி அவன வரச் சொல்லு...அவனுக்கு என்ன கேடு வந்தது.”

இவ்வாறு கருப்பையா குடிமகன் என்ற தனது தொழிலில் நல்ல மதிப்பைக் கொண்டிருந்தாலும் கீழ்நிலையிலேயே அவனை வைத்து பார்க்கும் நிலையையும் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றார் (Ramakrishnan, 2005). “வேலுத்தேவர் மகன் மிலிட்டரிக்குப் போவதற்கு முன்பு அவனுக்குக் கூட அவரே வெட்டிவிட்டார். அவன் மிலிட்டரிலிருந்து வந்த பிறகு ஒரு நாள் அவனே சவரம் பண்றதைப் பார்த்து கருப்பையா சிரித்தான்.

“என்ன அப்பச்சி...இந்த வேலைய எல்லாம் செய்றீங்க

சொன்னா வந்துருப்பன்ல”

“மிலிட்டரியிலே எல்லாருமே செஞ்சுகிறதுதான்”

ஏன் அங்கிட்டு குடிமகன் கிடையாதா”அவனுக்குச் சிரிப்பாக வந்தது. கருப்பையா அதைப் பலரிடமும் சொல்லிக் கொண்டிருந்தான்” (Ramakrishnan, 2005).

மேலும் இன்றைய நவீன காலத்தில் தொழில்நுட்ப உதவியுடன் அவரவர் முடியை வெட்டிக் கொள்ளுவதால் கிராமத்தில் உள்ள குடிமகன்களின் தொழில் அழியும் நிலையினை வேலுத்தேவரின் மகனின் கூற்றின் வழி தோலுரித்துக் காட்டுகின்றார்.

## முடிவுரை

இதே போன்று பல்வேறு சமூகத்தின் இனக்குழு பண்பாட்டு முறைகளையும் ஆராய்வதற்கு உந்துகோலாக அமைகின்றது. குடிமகன் என்னும் தொழில்களைப் போல் இன்னும் பல தொழில்கள் அழிவு நிலையை நோக்கிச் செல்வதை நாம் அறிந்து கொண்டு அதனை மீட்டெடுக்க வேண்டுவதன் அவசியத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. மனித மனதில் உள்ள தான் என்ற நிலையை ஒழித்து அனைவருக்கும் பகிர்ந்து வாழ்தலின் இன்றிமையாத முக்கியத்துவத்தை விளக்குகின்றன. இவ்வாறு இனக்குழுக்கள் பற்றிய பண்பாட்டு செய்திகளை எஸ். ராமகிருஷ்ணனின் ‘நிழலாய் இருந்தவர்கள்’ சிறுகதை

வெளிப்படுத்தும் தன்மையைக் கருத்தாழம் மிக்கதாக இவ்வாய்வுக் கட்டுரையின் வழி அறிந்து கொள்ள முடிகின்றது.

## References

Aasiriyar kulu, (1954) Kalaikalangiyam (Volume-3), Tamil Valarchi Kazhagam, Chennai, India.

Ramakrishnan, S. (2005) S. Ramakrishnan Kathaikal (Volume-1), Uyirmai pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License